<u>பத்திரிக்கைச் செய்தி</u>

<u>ஊழல் வழக்கில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோருக்கு தண்டனை விதித்து தீர்ப்பு</u>

வேலூர் மாவட்டம், ஆம்பூரைச் சேர்ந்த திரு.சி.நடராஜன், என்பவர் கடந்த 25 வருடங்களாக பொதுப்பணித்துறையில் காண்ட்ராக்டராக வேலை பார்த்து வந்தார். கடந்த 2009-2009ம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தாலுக்கா பூதேரி புல்லவாகக்கத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதி கட்டுவதற்காகவும் மற்றும் செய்யாறு அரசு மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவு, பிரசவ பிரிவு, பிரேத பரிசோதனை மற்றும் இதர கட்டிடங்கள் கட்டுவதற்கு மொத்த ஒப்பந்த தொகை ரூபாய் 2,08,64,512/- என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் அப்பணிகளுக்கான வைப்புத்தொகை மற்றும் காப்புத் தொகையாக ரூ.8,47,500/- பொதுப்பணித்துறையிடம் இருந்துள்ளது. கடந்த 2010ம் ஆண்டு மேற்கண்ட இரண்டு ஒப்பந்த வேலைகளையும் முடித்து வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகை பெறுவதற்கு தடையில்லா சான்று கேட்டு கடந்த 07.12.2011 அன்று செய்யாறு பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.மாரியப்பா என்பவரை சந்தித்து கேட்டபோது மொத்த ஒப்ப்நத தொகையான ரூ.2,08,64,512/-ல் பணமாக ரூ.50,000/-மும் மற்றும் ரூ.1,00,000/-க்கான காசோலை ஒன்று பெயர் குறிப்பிடாமல் கொடுக்கவேண்டும் என்றும், அதேபோல் தொழில் நுட்ப உதவியாளர் திருமதி.தமிழ்செல்வி அவர்களை

அணுகியபோது மொத்த ஒப்பந்த தொகையான ரூ.2,08,64,512/-ல் ரூ.50,000/- இலஞ்சமாக கொடுத்தால் வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகையாக ரூ.8,47,500/- பொதுப்பணித்துறையிடம் இருந்து விடுவிக்க தடையில்லா சான்று வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள். இலஞ்சம் கொடுத்து தடையில்லா சான்றிதழ் பெற விருப்பம் இல்லாத புகார்தாரர் திரு.நடராஜன் அவர்கள் 25.01.2012ம் தேதி வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன்பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் வழக்கு பதிவு செய்து பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொண்டு செய்யாறு பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.மாரியப்பா மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் திருமதி.தமிழ்செல்வி ஆகியோரை லஞ்ச பணம் பெறும்போது கையும் களவுமாக பிடித்து கைது செய்யப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக திருவண்ணாமலை முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மன்றத்தில் விசாரணை நடைபெற்றதில் எதிரி திரு.மாரியப்பா மற்றும் திருமதி.தமிழ்செல்வி என்பவர்கள் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால் திருவண்ணாமலை முதன்மை குற்றவியல் நீதிமன்றம் இன்று 23.03.2023ம் தேதி திரு.மாரியப்பா என்பவருக்கு 1 வருட கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும அபராதம் ரூ.10,000/-ம் திருமதி.தமிழ்செல்வி என்பவருக்கு 1 வருட கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும் அபராதம் ரூ.15,000/-ம் விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டது.